

பெரம்பலூர் மாவட்டம் கிருஷ்ணாபுரம் அரசு மருத்துவமனைகளில் மருத்துவ மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், திடீர் ஆய்வு மேற்கொண்டார். அப்போது நோயாளிகளிடம் குறைகளை கேட்டறிந்தார். அங்கிருந்த மருத்துவர்களிடம் மருத்துவமனை கட்டமைப்புகள் குறித்தும் கேட்டறிந்த அமைச்சர் பொதுமக்களுக்கு உரிய முறையில் சிகிச்சை அளிக்க வேண்டும் என்றும் கூறினார்.

## பூவிருந்தவல்லியில் பாக முகவர்கள் கூட்டம்!

திருவள்ளூர், நவ. 6–

திருவள்ளூர் மத்திய மாவட்டம் பூவிருந்த வல்லி கிழக்கு ஒன்றிய தி.மு.க. சார்பில் மாவட்டக் கழகச் செயலாளர் அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் ஆலோசனைபடி சோராஞ்சேரி கண்ணப்பாளையம் ஊராட்சிகளில் உள்ள பாக முகவர்கள் மற்றும் பாக பணிக் குழு உறுப்பினர்கள் ஆலோசனை ஆய்வு கூட்டம் ஒன்றியச் செயலாளர் ப.ச.கமலேஷ் ஏற்பாட்டில் நடைபெற்றது.

இதில் பூவிருந்த வல்லி சட்ட மன்ற உறுப்பினர் ஆ.கிருஷ்ணசாமி, பூவிருந்த வல்லி தொகுதி பொறுப்பாளர் பி.டி.சி.செல்வராஜ் ஆகியோர் கலந்து கொண்டு வருகின்ற தேர்தல் பணி குறித்து பல்வேறு ஆலோசனைகளை வழங்கினார்கள். அருகில் பொதுகுழு உறுப்பினர்கள் காஞ்சனா சுதாகர், வி.குமார், வழக்கறிஞர் என்.பி.மாரிமுத்து, ஏ.ஜனார்தனன், எம்.இளையான், கே.எஸ்.புகழேந்தி, சுமதி குமார், ஏ.ஆர்.பாஸ்கர், வயலை ஆர்.பிரபாகரன், ஏ.ஜி.ரவி, குமரேசன், என்.சண்முகம், வி.தணிகாசலம், சுகுமாரன், எம்.அருணாச்சலம், எம்.ராம்பாபு, பேட்டை த.திருமலைராஜ், மு.ராஜாராம், கேசவன், வழக்கறி ஞர்கள் அருண், எம்.அத்திகிரி அருளாளன், திருலோகசுந்தர், பாரிமளழகன், சாய்மோகன், ஸ்ரீதர், ஜெகதீஷ், விஜயரங்கன், அன்பழகன், கோவிந்தராஜ், மே.ம.முத்து, சி.வெங்கடேசன், எம்.கே.ராதா, மோகன் தாஸ், தேவி நித்தியனந்தம், டில்லிபாபு உள்பட பலர் பங்கேற்றனர்.

## பட்டிக்காடும் பட்டணமும்



**பட்டிக்காடு :** ஏன் தம்பி; “கலைஞர் இருக்கும்போதே, 20 ஆண்டுக் காலம் தி.மு.க.வுக்காக மு.க.ஸ்டாலின் உழைத்தார்” என்று எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பேசியிருக்கிறாரே ?

**பட்டணம் :** ஆமாமய்யா; சேலம் மாவட்டம் வீரப்பம் பாளையத்தில் நடந்த அ.தி.மு.க. செயல்வீரர் கூட்டத்தில்தான் அப்படிப் பேசியிருக்கிறார்.

தமிழ்நாடே, ஏன் இந்தியாவே ஏற்கனவே ஏற்றுக்கொண்ட, வெள்ளிடைமலை போன்ற உண்மையை தற்போது எடப்பாடி ஒப்புக் கொண்டு ஒப்புக்காகப் பேசியுள்ளார்.

தொடர்ந்து பொய்களையே பேசிக் கொண்டிருக்கிறோமே, ஒரு முறையாவது உண்மையைப் பேசினால்தான், பேசிவரும் பொய்களைக் காது கொடுத்தாவது மற்றவர் கேட்பர் என்று அவரது நப்பாசை உள்ளம் நச்சரித்திருக்கும் !

இப்போது முலாம் பூசி, இதுவரை அவர் உதிர்த்த மூலாதாரப் பொய்களை மறைத்துவிட முடியுமா ?

### மக்களை வதைக்கும் நாடு முழுவதும் உள்ள

# சுங்கச்சாவடிகளை அகற்ற அனைவரும் ஒன்றுபட வேண்டும்!

### மூத்த வழக்கறிஞர் பி.வில்சன் எம்.பி. அழைப்பு !

சென்னை,நவ.6-

தி.மு.க. மாநிலங்களவை உறுப்பினர் பி.வில்சன் தமது எக்ஸ் தளத்தில் கூறியதாவது:-

அக்டோபர் 2024 நிலவரப்படி, தமிழ்நாட்டில் தற்போது 64 சுங்க கட்டண சாவடிகள் இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தின் கீழ் செயல்பட்டு வருகின்றன.

நாடு முழுவதும் சுங்கச் சாவடிகளை ஒழிப்பது தொடர்பாக நாடாளுமன்றத்தில் நான் எழுப்பிய சிறப்பு கவன ஈர்ப்பு கேள்விக்கு பதிலளிக்கையில் மத்திய இணை அமைச்சர் ஹர்ஷ் மல்ஹோத்ரா

இந்த தகவலைத் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நான் எழுப்பிய கேள்விகளுக்கு பதிலளிக்கும் போது அமைச்சருக்கு, அதிகாரிகளால் போதிய ஆலோசனைகள் வழங்கப்படவில்லை என்பது ஆச்சரியமளிக்கிறது.



அமைச்சரின் எழுத்துப் பூர்வ பதிலில், 1997 ஆம் ஆண்டின் முந்தைய தேசிய நெடுஞ்சாலை கட்டண விதிகளில் அறுபது கிலோ மீட்டர் தூரம் குறித்து எந்த அளவுகோலும் இல்லை என்று கூறப்பட்டுள்ளது.

இது 1997 விதிகளைப் பற்றிய தவறான புரிதலைக் குறிக்கிறது. இந்த விதியானது உண்மையில் இரண்டு சுங்கச்சாவடிகளுக்கு இடையில் 80 கி.மீ தூரத்தை குறிப்பிடுகிறது.

மேலும், ஒன்றிய அமைச்சர் நிதின் கட்கரி, 60 கி.மீ சுற்றளவில் சுங்கச்சாவடிகள் அனுமதிக்கப்படாது என்று நாடாளுமன்றத்தில் தவறுதலாக அறிவித்து விட்டார் என்பதை இது குறிக்கிறதா?

சென்னையில் உள்ள பரனூர் சுங்கச் சாவடியில் சாலை பயனர்களுக்கு 2008 கட்டண விதிகளின் விதி 6 இல் கோடிட்டுக் காட்டப்பட்டுள்ள பலன்களை மறுப்பது அநீதியானது. இது சுங்க கட்டணங்களில் 60 சதவீதம் குறைக்க அனுமதிக்கிறது, இதனால் 40 சதவீதம் குறைக்கப்பட்ட விகிதத்தில் கட்டணம் வசூலிக்க உதவுகிறது.

இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையமானது பரனூரில் செய்த முதலீட்டை விட ரூ.28.54 கோடி கூடுதல் இலாபம் ஈட்டியுள்ளது என்பதையும், விதிகளின் படி சுங்கக் கட்டணத்தைக் குறைக்கத் தவறிவிட்டது என்பதையும் அமைச்சர் ஒப்புக்கொள்கிறார்.

அதுமட்டுமின்றி, வசூல் செய்யப்பட்ட அதிகப்படியான நிதியானது இந்தியாவின் ஒருங்கிணைந்த நிதியில் டெபாசிட் செய்யப்படுகிறது என்பதும், அது தேசிய நெடுஞ்சாலைகளை மேலும் மேம்படுத்துவதற்கும் விரிவாக்குவதற்கும் ஒதுக்கப்படுகிறது என்ற விளக்கமும் மிகவும் கேள்விக்குரியது.

இந்த நடைமுறையானது சுங்கச்சாவடி கட்டணம் குறித்து நிறுவப்பட்ட சட்டங்களை மீறுவதாகவும், பொது நிதியை தவறாகப் பயன்படுத்துவதாகவும், சாலை பயனர்களின் செலவில் ஒரு சிலருக்கு பயனளிப்பதாகவும் தெரிகிறது. மேலும், இந்த முதலீடுகள், செலவுகள் மற்றும் வசூல்களை மறுஆய்வு செய்ய சுயாதீன தணிக்கை ஆணையம் என்று எதுவும் இல்லை.

கட்டண விதிகள் பெரும்பாலும் நெகிழ்வான விதிமுறைகளுடன் ஒப்பந்தக்காரர்களுக்கு சாதகமாக உள்ளன என்பது அனைவரும் அறிந்ததே.. அதே நேரத்தில் பொது மக்கள் அத்தகைய அநீதியான சட்டத்தின் கீழ் நியாயமற்ற தொகையை செலுத்த நிர்பந்திக்கப்படுகிறார்கள்.

எனவே, இந்த அநியாயமான சுரண்டலுக்கும், கொள்ளைக்கும் அஞ்சி நாம் நம் வீட்டுக்குள்ளேயே முடங்கிக் கிடக்கும் ஒரு நாள் வரலாம்.

இந்த நியாயமற்ற சுங்கச் சாவடி கட்டணங்களை எதிர்க்கவும், நாடு முழுவதும் சுங்கச்சாவடிகளை அகற்றவும் நாம் அனைவரும் ஒன்றுபட வேண்டும்.

இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

### எஸ்.எம்.மதுரா செந்தில் – உமாராணி தலைமையில்

# பரமத்திவேலூரில் பாக முகவர்கள் ஆலோசனைக் கூட்டம்!

நாமக்கல், நவ. 6 -

நாமக்கல் மேற்கு மாவட்டம், பரமத்திவேலூர் சட்ட மன்ற தொகுதிக்குட்பட்ட பொத்தனூர், பாண்டமங்கலம், வெங்கரை, வேலூர், பரமத்தி ஆகிய பேரூர் பாக முகவர்களுக்கு வருகின்ற நவம்பர் 16, 17 ஆம் தேதிகளில் நடைபெறவுள்ள வாக்காளர் பட்டியல் சரிபார்த்தல், பெயர் சேர்த்தல் நீக்கல் முகாம் குறித்து ஆலோசனைக்கூட்டம் பரமத்திவேலூர் தொகுதி கழக அலுவலகம், கலைஞர் அரங்கில் மாவட்டக் கழக செயலாளர் எஸ்.எம்.மதுரா செந்தில், பரமத்திவேலூர் தொகுதி பொறுப்பாளரான மாநில அயலக அணி துணைச் செயலாளர் திருமதி. உமாராணி ஆகியோர் தலைமையில் நடைபெற்றது.

ஒன்றிய கழக செயலாளர்கள் எம்.தங்கவேல், ஏ.பி.ஆர்.சண்முகம், கே.கே.சண்முகம், பேரூர் கழக செயலாளர்கள் ஆர்.கருணாநிதி, பி.முருகன், பி.முருகவேல், எம்.ராமலிங்கம், எம்.ரமேஷ்பாபு ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

கூட்டத்தில் மாவட்ட கழக செயலாளர் அவர்கள் பேசுகையில் பாகமுகவர்கள் அனைவரும் வாக்காளர்கள் பெயர் சேர்த்தல் முகாமில் கலந்து கொண்டு 18 வயது பூர்த்தியடைபவர்களும், வாக்காளர் பட்டியலில் பெயர் இடம் பெறாதவர்களையம், புதியதாக குடிபெயர்ந்து உள்ள வாக்காளர்களின் பெயர்களையும் புதிய வாக்காளர்கள் பட்டியலில் சேர்க்கவும், தொகுதியிலிருந்து இடம்பெயர்ந்த வர்கள் மற்றும் இறந்த வர்கள் பெயர்களை தற்போதுள்ள பட்டியலில் இருந்து நீக்கவும், சேர்க்கவும் உதவிட வேண்டும் என கேட்டுக்கொண்டார்.

இக்கூட்டத்தில் பொதுக்குழு உறுப்பினர்கள் பி.பி.சாமிநாதன், பி.சிவக்குமார், பேரூராட்சிமன்ற தலைவர்கள் மணி, சோமசேகர், சார்பு அணி நிர்வாகிகள் சுந்தர், உதயகுமார், தனகரன், மலர்கண்ணன், முரளி, வைரமணி, வசந்தி, குப்புசாமி, பாக்கியராஜ், சீனிவாசன் மற்றும் பாகமுகவர்கள் (BLA2) உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

### கள்ளக்குறிச்சி வடக்கு மாவட்ட கழக துணை செயலாளர்

# அ.பாண்டலம் ஊராட்சி மன்றத் தலைவர் பாப்பாத்தி நடராஜன் இல்ல இணை ஏற்பு விழா!

### அமைச்சர் எ.வ.வேலு தலைமையில் நாளை நடக்கிறது!

கள்ளக்குறிச்சி, நவ.6 -

கள்ளக்குறிச்சி மாவட்டம், சங்கராபுரம் வட்டம் அ.பாண்டலம் ஊராட்சி பா.நடராஜன் (கல்வித் துறை) வடக்கு மாவட்ட கழக துணைச் செயலாளர் அ.பாண்டலம் ஊராட்சி மன்ற தலைவர் பாப்பாத்தி நடராஜன் இவர்களின் மகன் ந.நவீன்ராஜிக்கும், கோயம்புத்தூர் மாவட்டம், கோவைப்புதூர், கவுண்டம் பாளையம் கே.ஜீவானந்தம் _ சுனிதா இவர்களின் மகள் ஜீ.நித்யாவுக்கும் நாளை (07.11.2024) வியாழக்கிழமை காலை 9.01 மணியளவில் சங்கராபுரத்தில் அமைந்துள்ள எஸ்.ஏ.எஸ் திருமண மஹாலில் பொதுப்பணிகள்,

நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சரும், மாவட்டத்தின் பொறுப்பு அமைச்சருமான எ.வ.வேலு கலந்து கொண்டு தலைமை தாங்கி திருமணத்தை நடத்தி வைத்து மணமக்களை வாழ்த்துகிறார்.



மேலும் திருமண விழாவில் கள்ளக்குறிச்சி வடக்கு மாவட்ட கழக செயலாளர், சங்கராபுரம் தொகுதி சட்ட மன்ற உறுப்பினர் தா.உதய சூரியன், கள்ளக்குறிச்சி தெற்கு மாவட்ட கழக செயலாளர், ரிஷிவந்தியம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் வசந்தம் க.கார்த்திகேயன், வடக்கு மாவட்டக் கழக அவைத்தலைவர், உளுந்தூர்பேட்டை தொகுதி சட்டமன்ற உறுப்பினர் ஆ.ஜெ.மணிக்கண்ணன்,

கள்ளக்குறிச்சி தொகுதி நாடாளுமன்ற உறுப்பினர் தே.மலையரசன், மாநில மகளிரணி துணை செயலாளர் ஆ.அங்கையற்கண்ணி ஆகியோர்கள் முன்னிலையில் நடைபெற்று மணமக்களை வாழ்த்துகின்றனர், கழக விருது, சங்கராபுரம் தெற்கு ஒன்றிய கழக செயலாளர், கள்ளக்குறிச்சி மாவட்ட ஆவின் பெருந்தலைவர் ந.ஆறுமுகம் வரவேற்புரையில், கள்ளக்குறிச்சி ஒன்றிய குழு பெருந்தலைவர் அலமேலு ஆறுமுகம், சங்கராபுரம் பேரூராட்சி மன்ற தலைவர் ரோஜாரமணி தாகப்பிள்ளை, வடக்கனந்தல் தா.குமரன், முன்னாள் ஒன்றிய கழக செயலாளர் அரசை அ.இளஞ்செழியன், தொழிலதிபர் தேவபாண்டலம் ஆ.கதிரவன் உள்ளிட்ட திருவாளர்கள் வாழ்த்துரையில் திருமணம் இனிதே நடைபெறுகிறது. இந்த இணை ஏற்பு விழாவில் முன்னாள், இந்நாள் சட்ட மன்ற உறுப்பினர்கள், முன்னாள், இந்நாள் நாடாளு மன்ற உறுப்பினர்கள், கழக நிர்வாகிகள், கழக மூத்த முன்னோடிகள், அரசியல் பிரமுகர்கள், அரசு அதிகாரிகள், தொழிலதிபர்கள் மற்றும் மணமக்களின் குடும்பத்தினர், உறவினர்கள் உள்பட பலர் கலந்து கொண்டு வாழ்த்த உள்ளனர், திருமண விழாவிற்கு வருகை தரும் அமைச்சர் எ.வ.வேலு மற்றும் சட்ட மன்ற உறுப்பினர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்களை கள்ளக்குறிச்சி வடக்கு மாவட்ட கழக செயலாளர், அ.பாண்டலம் ஊராட்சி மன்ற தலைவர் பாப்பாத்தி நடராஜன் தலைமையில் மிக சிறப்பான முறையில் வரவேற்பு அளிக்கப்பட உள்ளது.



தமிழ்நாடு சுற்றுலாத் துறை அமைச்சராக இரா. ராஜேந்திரன் பதவியேற்றதை முன்னிட்டு அயலக தி.மு.க. பஹ்ரைன் நிர்வாகி சசிகுமார், எம்.காளிப்பட்டி கழக முன்னோடி மணி (ஏ ) பரமசிவம் ஆகியோர், அமைச்சரை மரியாதை நிமித்தமாக நேரில் சந்தித்து பொன்னாடை அணிவித்து வாழ்த்து தெரிவித்தனர்.



தஞ்சாவூர் மாவட்டம் பூதலூர் ஒன்றியம் கோட்டாரப்பட்டி ஊராட்சியில் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக்கழகம் கும்பகோணம் சார்பில் தொண்டாராயன்பாடி வழியாக தஞ்சாவூர் பழைய பேரூந்து நிலையத்திற்கு பேரூந்து சேவையினை தஞ்சாவூர் நாடாளுமன்ற உறுப்பினர் ச.முரசொலி, திருவையாறு சட்டமன்ற உறுப்பினர் துரை.சந்திரசேகரன் ஆகியோர் துவக்கி வைத்தார்கள். மாவட்ட ஊராட்சித்தலைவர் திருமதி.உஷாபுண்ணியமூர்த்தி, தமிழ்நாடு அரசு போக்குவரத்துக்கழக பொது மேலாளர் எஸ்.ஸ்ரீதரன், ஒன்றியக்குழுத்தலைவர் செல்லக்கண்ணு, ஊராட்சிமன்ற தலைவர் எம்.ராஜா மற்றும் பலர் உடன் உள்ளனர்.



குன்னூரில் கடந்த 2 நாட்களாக பெய்த கனமழை காரணமாக கிருஷ்ணாபுரம் சாலை துண்டிக்கப்பட்டது. இதனை நீலகிரி மாவட்ட தி.மு.க. செயலாளர் பா.மு.முபாரக் கழக நிர்வாகிகள், குன்னூர் நகராட்சி அதிகாரிகளுடன் சென்று பார்வையிட்டு விரைந்து பணிகளை மேற்கொள்ள அதிகாரிகளை கேட்டுக்கொண்டார். உடன் மாநில விளையாட்டு அணி துணைச் செயலாளர் குன்னூர் நகரமன்ற துணை தலைவர் வாசிம்ராஜா, நகரமன்ற உறுப்பினர்கள் மணிகண்டன், ஜாகீர் உசேன் மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளனர்.




நாமக்கல் மேற்கு மாவட்டம், பரமத்திவேலூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட பொத்தனூர், பாண்டமங்கலம், வெங்கரை, வேலூர், பரமத்தி ஆகிய பேரூர் பாக முகவர்களுக்கு வருகின்ற நவம்பர் 16, 17 ஆம் தேதிகளில் நடைபெறவுள்ள வாக்காளர் பட்டியல் சரிபார்த்தல், பெயர் சேர்த்தல் நீக்கல் முகாம் குறித்து ஆலோசனைக்கூட்டம் பரமத்திவேலூர் தொகுதி கழக அலுவலகம், கலைஞர் அரங்கில் மாவட்டக் கழக செயலாளர் எஸ்.எம்.மதுரா செந்தில், பரமத்திவேலூர் தொகுதி பொறுப்பாளரான மாநில அயலக அணி துணைச் செயலாளர் திருமதி.உமாராணி ஆகியோர் தலைமையில் நடைபெற்றது.